மராமத்து இலாகா, நீர்ப்பாசன இலாகா வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த இரண்டு வேலைகளில் மட்டும் ஆர்வம் காட்ட முன்வந்ததால் அரசாங்கம் அவர்களுக்குச் சலுகைகள் கொடுத்தது.

பொறையாருக்கு அருகே சோழர் காலத்துச் சிலைகள்

*303 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம் பொறையாருக்கு அருகே 1965-ம் ஆண்டு மே திங்களில் சோழர்காலத்துச் சிலைகள் அகப்பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவை யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Five idols were unearthed on 3rd May 1965 in Udaiyarkoilpattu village, Mayuram taluk in Thanjavur district and it cannot be definitely stated whether they belong to the Chola period.

(b) The idols are—

(1) Ganapathi (standing posture)—1 foot 4 inches.
(2) Gnanasammandar (dancing posture)—1 foot 9 inches.
(3) Ambikai (standing posture)—2 feet 6 inches.
(4) Somaskandar (sitting posture)—1 foot 5 inches.
(5) Somaskandar Ambal (sitting posture)—1 foot 2 inches.

தாசில்தார்களுக்கு ஜீப் கார்கள்.

* 304 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :
திரு. கரு. சிமைச்சாமி : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தாசில்தார் தங்களுடைய வேலைகளைத் துரிதமாகக் கவனிப்பதற்கு ஜீப்புகள் வழங்கக்கோரி மாவட்ட கலெக்டர்கள் மகாநாட்டில் கோரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அவ்வாறு வழங்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) Yes. The Government have approved the proposal of the Board of Revenue for supply of jeeps to all Taluk Tahsildars on a phased programme covering a period of three years. To start with, the purchase of 19 jeeps during 1965–66 has been sanctioned.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: சார், தாலுகா தாசில்தார்களுக்கு ஜீப் வழங்குவதோடு, தனித் தாசில்தார்களுக்கும் ஜீப்கள் வழங்க அரசாங்கம் முன்வருமா ?